NP – 092

24

III Semester B.Com. Degree Examination, February/March 2024
(NEP) (Freshers + Repeaters)
TAMIL LANGUAGE (Paper – III) (Part – I)

Time : 2½ Hours Max. Marks : 60

SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (4×1=4)

1) திருவரங்கக் கலம்பகம் எந்த பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பாடப்பட்டுள்ளது

1) அகப்பொருள் 2) புறப்பொருள்
3) முதற்பொருள் 4) கருப்பொருள்

St Claret College LIBRARY Bangalore-560013

2) முத்தொள்ளாயிரம் இவரைப் பற்றி பாடப்பட்டது

1) களப்பிரர்கள் 2) பல்லவர்கள்
3) மூவேந்தர்கள் 4) நாயக்கர்கள்

3) ஔவையார் பாடிய சமயநூல்களில் ஒன்று

1) கைக்கிளை 2) விநாயகர் அகவல்
3) சின்னப்பூ 4) தும்பை மாலை

4) ''பாரதி வம்சம்'' என்னும் சிறுகதையை எழுதியவர்

1) ஆதவன் 2) ஆண்டாள் பிரியதர்ஷினி
3) அ. முத்துலிங்கம் 4) டாக்டர் என். முருகேசன்

II. எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (4×4=16)

1) ''மாணவப் பருவத்தில் அறிவினால் என்னை
பிரமிக்க வைத்த சுயம்புலிங்கம் முதிர் வாலிபப் பருவத்தில்
உழைப்பினாலும், தியாகத்தினாலும் என்னை பிரமிக்க
வைத்துவிட்டார்''

2) ''கரிபரந்து எங்கும் கடுமுள்ளி பம்பி
நரிபரந்து நாற்றிசையும் கூடி''

3) ''வாடுகின்றனை வீடு சென்று என்று இனி
மருவுவை மட நெஞ்சே''

P.T.O.

4) ''இனியது கேட்கின் தனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது''

5) ''தானமும் தவமும் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே''

6) ''நான் இறக்க நேரிட்டாலும் அப்போ கிடைக்கிற
சாவு பணத்தை வாங்கி வரும் வருசத்துலே
படிக்க வைக்கணுமாம்''

## SECTION – B

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. (4×6=24)

1) கொடியது, கோடி பெறுவன பற்றி ஔவையாரின் கருத்துகளை விளக்குக.

2) முத்தொள்ளாயிரம் காட்டும் சேர நாட்டின் வளத்தை பற்றி எழுதுக.

3) திருமால் பெருமை குறித்து திருவரங்கக் கலம்பகம் எவ்வாறு எடுத்துரைக்கின்றது ?

4) ஆறுமுகத் தேவர் பால்ய சிநேகிதனுக்கு எழுதிய கடிதத்தைப் பற்றி விளக்குக.

5) முடியாத செயல்கள், இலை உதிர்த்த மரம் பற்றி ஔவையாரின் கருத்துகளை விளக்குக.

6) ''யுகமலர்'' என்னும் சிறுகதை புலப்படுத்தும் பெண்ணிய கருத்துகளை விளக்குக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. (4×4=16)

1) தும்பை, வாகை திணைகளை விளக்குக.

2) உரிப்பொருள் என்றால் என்ன ? ஐந்திணைக்களுக்குரிய உரிப்பொருளைக் குறிப்பிடுக.

3) குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்களைக் குறிப்பிடுக.

4) அகத்திணை என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

5) ஐந்திணைக்குரிய பொழுதுகளை அட்டவணைப்படுத்துக.

6) புறத்திணை என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

---